## நிர்வாகத் திறனற்ற ‘டம்மி’ முதல்வர்! செயலற்ற ‘சங்கி’ அமைச்சர்!

# மிரட்டும் மின்வெட்டு... தவிக்கும் தமிழகம்!

## மக்களின் இயல்பு வாழ்க்கையை சிதைத்துப் போட்ட த.வெ.க. அரசு!

## ‘ஜூனியர் விகடன்’ கடும் விமர்சனம்!

**முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, கடந்த மூன்று மாதங்களாகத் தொடரும் அறிவிக்கப்படாத மின்வெட்டுப் பிரச்சினை, ஒட்டு மொத்தத் தமிழகத்தையும் போராட்டக் களமாக மாற்றியிருக்கிறது. இரண்டு மணி நேரத்திலிருந்து அதிகபட்சம் எட்டு மணி நேரம் வரை நீடிக்கும் மின்வெட்டு, மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைத்துப்போட்டிருக்கிறது.**

### சென்னையில் மாலை வரை நீடிக்கும் மின்வெட்டு!

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு, தலைநகர் சென்னையில் லேசாகத் தலைதூக்கிய மின்வெட்டுப் பிரச்சினை, தற்போது தமிழகம் முழுவதும் தாண்டவமாடி வருகிறது. இயல்பைத் தாண்டி நீடிக்கும் கோடை வெப்பத்தைச் சமாளிக்க முடியாமல் திணறும் மக்கள், இரவில் ஏற்படும் மின்வெட்டால் நிதானத்தை இழந்து தீப்பந்தங்களுடன் மின் அலுவலகங்களை முற்றுகையிட்டு வருகின்றனர். சென்னை நகர்ப்பகுதி மட்டுமன்றி, பெருநகரத்துடன் இணைக்கப்பட்ட பெருங்களத்தூர், முடிச்சூர், குன்றத்தூர், சேலையூர், தாம்பரம், அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் காலை 9 மணிக்கு நிறுத்தப்படும் மின்சாரம், பல நேரங்களில் மாலை 5 மணி வரை நீடிக்கிறது.

அதேபோல அடையாறு, கோடம்பாக்கம், வடசென்னை உள்ளிட்ட பகுதிகளிலும் இதே நிலைதான். வேலூரில் அமைச்சர் செங்கோட்டையனும், கும்மிடிப்பூண்டியில் சி.பி.எம் மாநிலச் செயலாளர் பெ. சண்முகமும், திருச்செந்தூரில் வி.சி.க தலைவர் திருமாவளவனும் பேசிக் கொண்டிருக்கும்போதே மின்சாரம் துண்டிக்கப்பட்டது போன்றவை, தமிழகம் முழுவதும் நிலவிவரும் மின்வெட்டுப் பிரச்சினையை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

அதேபோல, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம் பகுதியில் முன்னாள் எம்.எல்.ஏவும், இந்நாள் த.வெ.க நிர்வாகியுமான இசக்கி சுப்பையா விரட்டியடிக்கப்பட்ட சம்பவம், மின்வெட்டுக்கு எதிராக நடைபெற்றுவரும் மக்களின் கிளர்ச்சி.

மதுரையைச் சுற்றியிருக்கும் கிராமங்களில் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை 15 நிமிடங்கள் மின்வெட்டு ஏற்படுவதாகக் குமுறுகின்றனர் அந்தப் பகுதி மக்கள். குறிப்பாக, வாடிப்பட்டி, உசிலம்பட்டி, எஸ்.எஸ்.காலனி, மேலூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் இரவில் இரண்டிலிருந்து ஐந்து மணி நேரம் வரை மின்சாரத்தை நிறுத்திவிடுவதால், ‘நாளெல்லாம் உழைத்துக் களைத்துத் திரும்பும் எங்களால் கொஞ்ச நேரம்கூடத் தூங்க முடியவில்லை’ என்று கண்ணீர் வடிக்கிறார்கள்.

### சாலை மறியல், எம்.எல்.ஏ முற்றுகை... மின் அலுவலகங்களுக்கு அஞ்சலி!

திருச்சி மாவட்டம், மணிகண்டம் ஒன்றியத்திலுள்ள அம்மாபேட்டை, வடக்கு அரியாவூர் பகுதிகளில் தினமும் இரண்டு மணி நேரத்துக்கும் மேலாக மின்வெட்டு ஏற்படுகிறது. அதில் ஆத்திரமடைந்த அந்தப் பகுதி மக்கள் திரண்டு வந்து, தேசிய நெடுஞ்சாலையிலுள்ள சத்திரப்பட்டி பகுதியில் சாலை மறியலில் அமர்ந்துவிட்டனர்.




கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம், குளித்தலை தாலுகா பகுதிகளிலுள்ள 80% கிராமப் பகுதிகளில் தொடர்ச்சியாக மின்வெட்டு செய்யப்படுகிறது. அதில் கடுப்பான மக்கள், சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது அந்த வழியாகச் சென்ற கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதி த.வெ.க எம்.எல்.ஏ சத்தியாவைச் சூழ்ந்து கொண்டு சரமாரியாகக் கேள்வி கேட்க, ‘தப்பித்தோம் பிழைத்தோம்’ என்று அங்கிருந்து நகர்ந்தார் எம்.எல்.ஏ.

அதேபோல, தேனி மாவட்டம், போடி சட்டமன்றத் தொகுதியிலுள்ள உப்பார்பட்டி, பாலார்பட்டி போன்ற கிராமங்களில் தொடர்ச்சியாக எட்டு மணி நேரத்துக்கும் மேலாக மின்தடை நீடிப்பதால், தங்களால் விவசாயம் செய்ய முடியவில்லை என்று போராட்டங்களில் குதித்திருக்கின்றனர், அந்தப் பகுதி விவசாயிகள். ஆண்டிபட்டி, பெரியகுளம், கம்பம் பகுதிகளில் எட்டு மணி நேரமும், திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் நான்கு மணி நேரமும் தொடர்ச்சியாக மின்வெட்டு இருப்பதாகக் கூறி மின்சார அலுவலகங்களுக்கு மெழுகுவத்தி வைத்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர் மக்கள்.

### முடங்கியத் தொழில் நிறுவனங்கள்!

சேலம் மாவட்ட மக்களின் முக்கியத் தொழில் விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழில்கள்தான். ஆனால் இந்தத் தொடர் மின்வெட்டால் உற்பத்தி தடைப்படுவதுடன், ஆர்டர்களையும் குறித்த நேரத்தில் கொடுக்க முடியவில்லை. அதனால் ஏற்படும் நஷ்டத்தை எப்படி ஈடுசெய்வது என்று தெரியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள் நெசவாளர்கள்.

மேலும், லேத் வொர்க்ஸ், மாவு மில்கள், வெல்டிங் கடைகள் போன்ற மின்சாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் சிறு தொழில்கள் பகல் நேர மின்வெட்டால் வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றன. அதேபோல, சேலம் மாவட்டத்தின் ஏற்காடு, வாழப்பாடி போன்ற பகுதிகளில் ஏற்படும் தொடர் மின்வெட்டால், அந்தப் பகுதியின் துணைமின் நிலையங்களை முற்றுகையிட்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் நகர், புறநகர், கிராமம் எனப் பாரபட்சமின்றி தினமும் பலமுறை ஏற்படும் அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். சத்தியமங்கலம் முதல் வெள்ளித்திருப்பூர் வரை தொடரும் மின்வெட்டால் விசைத்தறி உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டிருப்பதுடன், இரவு நேரங்களிலும் மின்தடை ஏற்படுவதால் மக்கள் தூங்க முடியாமல் தவிக்கின்றனர். பலமுறை புகாரளித்தும் நடவடிக்கை இல்லாததால், மின்வெட்டைக் கண்டித்து மக்கள் சாலை மறியலில் ஈடுபடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர்ச்சியாக நிலவும் மின்வெட்டு, ஓசூர் பகுதியில் செயல்பட்டு வரும் குறு, சிறு தொழில் நிறுவனங்களை மொத்தமாக முடக்கிப்போட்டிருக்கிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் மாநகராட்சிப் பகுதிகளில் பெரிய அளவில் மின்வெட்டு பிரச்சினை இல்லை என்றாலும், தொழில் நகரமான கோவில்பட்டியில் நாள்தோறும் அறிவிக்கப்படாத மின்வெட்டு இருக்கிறது. அதனால் தீப்பெட்டி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது.

**- நன்றி**

**‘ஜூனியர் விகடன்’**

**23.9.2026**

---

### மலேசியாவில் பயிலும் மாணவன் பாரதிதாசனை வஞ்சித்துவிட்டு

## பழிச்சொல்லைத் தவிர்க்க வியாக்யானம் செய்வதா?

### அமைச்சர் வன்னி அரசுக்கு — கோவி.செழியன் எம்.எல்.ஏ., பதிலடி!



சென்னை, செப்.21-

முன்னாள் அமைச்சர் கோவி.செழியன் எம்.எல்.ஏ. வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வி உதவித்தொகை திட்டத்தில் மாணவன் பாரதிதாசனை வஞ்சித்துவிட்டு, ஆதாரங்கள் எல்லாம் அள்ளிப் போட்ட பிறகு, பழிசொல்லை தவிர்க்க வியாக்கியானம் பேசிக் கொண்டிருக்கிறார் அமைச்சர் வன்னி அரசு ‘பாரதிதாசனுக்கு நிதியை வழங்க முடியாது என்றால், தி.மு.க.வும், தமிழ் நாட்டு மக்களும் இணைந்து மாணவரின் முழு கல்விக் கட்டணத்தையும் ஏற்று அவரைப் படிக்க வைப்போம்’ என தலைவர் சொன்ன பிறகு தானே “நிதி வழங்கப் படும்” என்ற அறிவிப்பை வெளியிடுகிறீர்கள்.

தி.மு.க. ஆட்சியில் எந்த தொய்வும் இல்லாமல் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்த இந்த திட்டம், தவெக ஆட்சியில் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப் படும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர் பொது வெளியில் கேட்டுவிட்டார் என்ற வஞ்சகத்துடன் பழிவாங்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டது கடுமையாக கண்டிக்கத்தக்கது.

ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக தொடங்கப்பட்ட இயக்கமான வி.சி.க.வை சேர்ந்த வன்னி அரசு பொறுப்பில்லாமல் நடந்து கொண்டு விட்டு, இப்போது பாரதிதாசனை “தம்பி” என்று உருகுகிறார். இது கூட அந்த மாணவன் சிந்திய கண்ணீரும், எங்கள் தலைவர் “செலவை ஏற்று படிக்க வைப்போம்” என சொன்ன பிறகுதானே நடக்கிறது? தன்னுடைய தவறுகளை மறைக்க பொய்களை சொல்லி மடைமாற்ற பார்க்கிறது இந்த அரசு, அதற்கு உடந்தையாக இருக்கிறார் அமைச்சர் வன்னி அரசு.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

### தி.மு.க. மாணவர் அணியினர்

## மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தலில் களப்பணி!

### அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி அறிவிப்பு!



ஈரோடு, செப். 21-

மதுராந்தகம் - தாராபுரம் இடைத்தேர்தலில் களப்பணியில் தி.மு.க. மாணவர் அணியினர் ஈடுபடுகின்றனர் என்று தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஈரோடு ஜெ.வீரமணி விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இளந்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் கழக வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில், திராவிட முன்னேற்றக் கழக மாணவரணியின் மாநில துணைச் செயலாளர்கள் கீழ்க்காணும் தொகுதிகளில் தங்கள் மண்டலங்களுக்கு உட்பட்ட மாவட்ட மாணவரணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகளுடன் இணைந்து செயல்படுமாறு கேட்டுக்கொள்ளப் படுகிறது.

இப்பணியில் கழக மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றி, இடைத்தேர்தலில் கழக வேட்பாளர்களின் வெற்றிக்கு வழிவகுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

### மதுரை - மீனாட்சி அம்மன் கோயில் குடமுழுக்கில்

## உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியை அவமதிப்பதா?

### முதல்வர் மன்னிப்புக் கேட்க - பி.வில்சன் எம்.பி. வலியுறுத்தல்!



சென்னை, செப்.21-

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குட முழுக்கில், தலைமை நீதிபதி, பக்தர்களை அமைச்சர் ஜெகதீஸ்வரி அவமதித்தது தொடர்பாக முதல்வர் விஜய் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று தி.மு.க. எம்.பி. பி.வில்சன் கூறியுள்ளார்.

தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் பி.வில்சன் நேற்று தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:-

மதுரை மீனாட்சியம்மன் கோயில் குட முழுக்கின் போது சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியை அவமதிக்கும் வகையில் அமைச்சர் ஜெகதீஸ்வரி நடந்து கொண்டதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியுள்ளன.

இந்த செய்திகள் உண்மையாக இருந்தால், இத்தகைய ஆணவத்திற்கு அரசியலமைப்பு ஜனநாயகத்தில் இடமில்லை. தலைமை நீதிபதி அரசாங்கத்தின் ஒரு அங்கமான நீதித்துறையின் தலைவர். நெறிமுறைப்படி அவர் ஆளுநர், முதல்வர் மற்றும் சபாநாயகருக்கு அடுத்தபடியாக வைக்கப்படுகிறார். மற்ற அமைச்சர்கள் மற்றும் ஆளும் கூட்டணியின் உறுப்பினர்களான நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்வரிசை இருக்கைகள் வழங்கப்பட்டிருக்கும் போது, தலைமை நீதிபதி மட்டும் ஏன் அவமதிக்கப்பட்டார்?

அனைத்திற்கும் மேலாக, அன்னை மீனாட்சியின் குட முழுக்கு விழாவைக் காண பக்தர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதன் மூலமாகவும், புனித தீர்த்தத்தைப் பெற அனுமதிக்கப்படாததன் மூலமாகவும் பக்தர்கள் அவமதிக்கப்பட்டுள்ளனர். தமிழக முதல்வர், இவற்றுக்காக தனிப்பட்ட முறையில் மன்னிப்புக் கோருவதோடு, எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



பேரறிஞர் அண்ணா 118வது பிறந்தநாள், தந்தை பெரியார் 148வது பிறந்தநாள் தி.மு.கழகம் துவக்கப்பட்ட நாள் ஆகிய முப்பெரும் விழாவை முன்னிட்டு, ஈரோடு தெற்கு மாவட்டம் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் தலைமையில் அவல்பூந்துறை நால்ரோட்டில், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கபட்டது. நிகழ்வில் ஒன்றிய,பேரூர், வார்டு, கிளைக் கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், BC, BLA2, BDA, BLC உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.